தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 15-7-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தரமான மஞ்சளுக்கு நல்ல விலை கிடைக்கும்

இந்தியாவில், 2013-14ல் மஞ்சள் 2.37 மில்லியன் எக்டரில் பயிரிடப்பட்டு 11.90 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. தெலுங்கானா, ஆந்திரா, தமிழ்நாடு, ஒடிசா, மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் மேற்கு வங்காளம் ஆகியவை மஞ்சள் மொத்த உற்பத்தியில் 80 – 85 சதவீதம் பங்களிக்கிறது. இந்தியாவிலிருந்து, மஞ்சள் அமெரிக்கா, ஈரான், ஐக்கிய அரபு நாடுகள் மற்றும் ஐக்கிய அரசு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில், 2013-14ல் மஞ்சள் 0.76 மில்லியன் எக்டரில் சாகுபடி செய்யப்பட்டு 4.62 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. ஈரோடு, சேலம், தர்மபுரி மற்றும் நாமக்கல் ஆகியவை மஞ்சள் உற்பத்தி செய்யும் முக்கிய மாவட்டங்களாகும். தற்போது நல்ல தரமான மஞ்சள் ரூ.6,800 - ரூ.7,800 வரை ஈரோடு சந்தையில் விற்கப்படுகிறது. தற்போது, சந்தைக்கு குறைந்த தரமுள்ள மஞ்சள் வரத்து மிகுந்து காணப்படுகிறது. இதற்கு காரணம் அடிக்கடி பெய்யும் மழையினால், அறுவடையான மஞ்சள் பாதிக்கப்பட்டு குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது. மேலும், இவ்விலை குறைவிற்கான காரணம் தரமான மஞ்சள் வரத்து குறைவு மற்றும் இருப்பு மஞ்சளின் அளவு அதிகரித்ததேயாகும்.

இச்சூழலில் விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கிவரும் வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு

மையத்தின் பின்புல அலுவலகம், ஈரோடு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கடந்த 19ஆண்டுகளாக நிலவிய மஞ்சள் விலை மற்றும் வர்த்தகர்களிடம் ஆய்வு நடத்தியது.

பொருளாதார அளவைகளின் அடிப்படையில் நல்ல தரமான மஞ்சள் செப்டம்பர்-அக்டோபர், 2015ல் விலை குவிண்டாலுக்கு ரூ.7,500– ரூ.8,100 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. அறுவடைக்கு பின் ஏற்படும் இழப்பு மற்றும் மஞ்சள் வேர் கிழங்கில் வண்டு துளைப்பான் ஆகியவை விலை குறைவிற்கான முக்கிய காரணங்களாகும். தகுந்த முறையில் இருப்பு வைக்கப்பட்ட, தரமான மஞ்சளுக்கு நல்ல விலை கிடைக்க வாய்ப்புள்ளது.

எனவே விவசாயிகள் மேற்கண்ட விலை முன்னறிவிப்பின் அடிப்படையில் மஞ்சளை விற்க பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்:**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயமுத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-2431405

**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்:**

பேராசிரியர் மற்றும் தலைவர்,
வாசனை மற்றும் தோட்டக்கலை பயிர்கள்,
தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-6611284
தொலைநகல்: 0422-2430781
மின்அஞ்சல்: spices@tnau.ac.in

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்